முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 983

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.06.2022, புதன்கிழமை

1. அறம் காக்க வந்த அண்ணலே
ஆறுமுக ஞான வள்ளலே
வரம் பெற்று என் சக்தியாக வாழும்
வள்ளலே ஆறுமுக ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 25 ம் நாள், 08.06.2022 புதன்கிழமை)
துணிவுகொண்டு தணிகாசலன் என் தயவாக
தூய நல் ஞான உலகம் படைக்க
3. படைக்கவே பண்பான ஞான வழிகளை
பாருலகோர் பின்பற்றும் விதமாக
இன்பமுற சைவ நெறிதன்னை
எல்லோரும் பின்பற்றி ஞான வழி வர
4. வருகவே வள்ளல் தன்மை காட்டும்
வள்ளலே ஆறுமுக அரங்கனே
அரங்கனே கலியில் சிறந்த ஞானி
அரங்கன் தர்மமே உலகை மாற்றும் மார்க்கமாகும்
5. ஆகவே அரங்கனை பின்பற்றி
அகிலத்தார் ஞானம் பயில
வரமென ஆறுமுகன் என் அருள்பெற்று
வையகத்தில் ஞான ஆட்சி பெறுவர்
6. ஞான ஆட்சித்தருகின்ற ஞானமுமாக
ஞானியாக ஆறுமுக அரங்கனை
வானவர்கள் துணையோடு ஆறுமுகன்
வழிநடத்தி உலகில் இயக்கி வர
7. வருகவே அரங்கன் வழி பெறும்
வல்லமையான ஞானமே
தருகின்ற அரங்கன் வழி தர்மமே
தரணியை மீட்டு ஞான உலகாக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–